12th September 1958]

SRI N. R. THIAGARAJAN : பாக்கியுள்ளவர்களின் பெயர்கள் அடங்கிய ஜாபிதா கொடுக்க முடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அம்மாதிரி ஜாபிதா என்னிடத்தில் இல்லை.

Dharangadhara Chemical Factory

*181 *Q.*—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri M. S. Selvarajan) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலுகாவில் ஆரம்பிக்கப்படும் தாரங்கதாரா கெமிகல் தொழிற்சாலைக்காக நில ஆர்ஜிதம் காரணமாய் வேலை இழக்கும் உப்புத் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) வேலை இழக்கும் உப்புத் தொழிலாளர்களுக்கு அக் கம்பெனியில் வேலைகளுக்கு முன்பாத்தியதை வழங்க ஏற்பாடு செய்ய ஏதேனும் உத்தேசமுண்டா?

THE HON SRI R. VENKATARAMAN : (அ) About 900 to 1,000 workers.

(ஆ) The company has assured the Collector of Tirunelveli that such of the affected salt workers who satisfy their requirements will be preferred to others for employment in the factory.

*182 *Q.*—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri M. S. Selvarajan) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலுகாவில் ஆரம்பமாகும் தாரங்கதாரா ரசாயனத் தொழிற்சாலை உபயோகத்திற்கு ஆர்ஜிதம் செய்யப்படும் பட்டா நிலங்களுக்கு தகுந்த நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டவில்லை என்று அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா?

(ஆ) அதன் மீது எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes, Sir. Two petitions, one from Sri M. S. Selvarajan, M.L.A., and the other from Sri S. Vinayaga Nadar, were received. The requests contained in the petitions were duly considered by the Special Deputy Collector in charge of the acquisition of lands in Tirunelveli district for the Dharangadhara Chemical Works, Limited. No action was considered necessary on the request, as reasonable compensation was paid to the land-owners.

SRI K. ANBAZHAGAN : இந்த கெமிகல் பாக்டரி தொழிற்சாலையில் இலங்கையிலிருந்து திரும்பி வருகிறவர்கட்கு வேலையளிக்க முதலில் சலுகை கொடுப்பதற்கு வழி செய்யப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது உப்பு தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருக்கிறவர்கள் நிலத்தை இழக்கிறார்கள். அவர்களுக்கு முதல் சலுகை கொடுக்கவேண்டும். அதற்குப் பிறகு மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும்.

SRI M. KALYANASUNDARAM : நிலத்திற்கு நஷ்டாடு கொடுப்பது எந்த அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது? இந்த நிலத்தின் மூலம் அவர்கள் சம்பாதித்து வந்த ஊதியம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறதா? அல்லது அந்த வட்டாரத்தில் நிலத்திற்கு இருக்கக்கூடிய மதிப்பை மட்டும் எடுத்துக்கொள்கிறார்களா?